DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.** 214/2020

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராஜேந்திரன் **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of November 2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். 12.08.2018ம்தேதி இரவு 10.15 மணிக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நாங்கள் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக ஆட்டோ ஓட்டுநரின் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. இனம் தெரியாத வாகனம் மோதியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருணாசலம் எனது சகோதரர் என்ற காரணத்தினால் நான் அவருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருணாசலம் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டு, அவரது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக புலன்விசாரணையில் தெரியவந்ததால், போலீசார் குற்ற இறுதி அறிக்கையை action dropped என குறிப்பிட்டு வழக்கை முடித்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவத்தன்று இருசக்கர வாகனத்தில் செல்லவில்லை என்றும், இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Additional District and Sessions Judge

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Tenkasi